இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

"திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் மறைவு ஒட்டுமொத்த திருஅவைக்கும் அளவில்லாத துயரத்தையும், பேரிழப்பையும் ஏற்படுத்தியுள்ளது" என்று திருத்தந்தையின் மறைவு குறித்து இத்தாலிய ஆயர் பேரவையின் தலைவர் கர்தினால் மத்தேயு வப்பி அவர்கள் கூறினார்.

# கடவுளின் அரவணைப்பில் திருத்தந்தையின் ஆன்மாவை அர்ப்பணிப்போம்

திருத்தந்தை பிரான்சிஸ் (ANSA)



திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் ஏப்ரல் 21, திங்கள்கிழமை காலை உரோம் நேரம் 7.35 மணிக்கு, அதாவது மலேசிய நேரம் 1.30pm மணிக்கு இறைபதம் அடைந்தார்.

"திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் மறைவு ஒட்டுமொத்த திருஅவைக்கும் அளவில்லாத துயரத்தையும், பேரிழப்பையும் ஏற்படுத்தியுள்ளது" என்று திருத்தந்தையின் மறைவு குறித்து இத்தாலிய ஆயர் பேரவையின் தலைவர் கர்தினால் மத்தேயு வப்பி அவர்கள் கூறினார். "இறைத்தந்தையின் கரங்களில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் ஆன்மாவை அர்ப்பணித்து செபிப்போம்" என்று கூறிய கர்தினால் வப்பி அவர்கள், "'இறை இரக்கத்தில் எல்லாம் வெளிப்படுகின்றது, இரக்கமுள்ள தந்தையின் அன்பினால் எல்லாம் தீர்க்கப்படுகின்றது' என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அடிக்கடி வலியுறுத்தியது போல, கடவுளின் அரவணைப்பில் அவர் ஆன்மாவை ஒப்படைப்போம்" என்றும் தெரிவித்தார்.

மேலும் "திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இறைபதம் அடைந்ததன் அடையாளமாக இத்தாலியில் உள்ள அனைத்துத் தலத்திருஅவைகளின் கோவில் மணிகளும் ஒலிக்கப்பட வேண்டும்" என்றும், "நமது தனிப்பட்ட மற்றும் கூட்டு செபத்தின் வழியாக ஒருவர் மற்றவருடனும், உலகளாவியத் திருஅவையுடனும் நமது ஒன்றிப்பை வெளிப்படுத்துவோம்" என்றும் உரைத்தார்.

ஏப்ரல் 26, வரும் சனிக்கிழமை காலை 10:00 மணிக்கு, வத்திக்கானின் புனித பேதுரு பெருங்கோவில் வளாகத்தில், இறைபதம் அடைந்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் இறுதிச் சடங்கு திருவழிபாட்டு நிகழ்வு, திருத்தந்தையர்களுக்குரிய இறுதித் திருச்சடங்குகள் (Ordo Exsequiarum Romani Pontificis) (எண். 82–109) நிறைவேற்றும் சட்டவிதிகளின்படி இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இறுதிச் சடங்கு திருவழிபாட்டு நிகழ்வை கர்தினால்கள் அவையின் தலைவர் கர்தினால் Giovanni Battista Re அவர்கள் தலைமையேற்று வழிநடத்துவார் என்றும் அவ்வறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருப்பலிக் கொண்டாட்டத்தின் முடிவில், இரங்கல் செய்தி மற்றும் பிரியாவிடை வழங்கும் நிகழ்வு நடைபெறும் என்றும், அதனைத் தொடர்ந்து அவரது உடலைத் தாங்கிய அடக்கப்பெட்டி புனித பேதுரு பெருங்கோவிலின் உள்ளே கொண்டு செல்லப்பட்டு, பின்னர் நல்லடக்கம் செய்வதற்காக புனித மேரி மேஜர் பெருங்கோவிலுக்குக் எடுத்துச் செல்லப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது.

செல்வராஜ் வசைமாணிக்கம் - வத்திக்கான்

---

மலேசியாவின் திருத்தூதுவர் மதிப்புமிகு பேராயர் வோஜ்சிக் சாலுஸ்கி அவர்களே,

நமது அன்புக்குரிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் மறைவுக்காக மிகவும் வருந்துகிறோம். மலேசியா, சிங்கப்பூர் மற்றும் புருணை ஆகிய நாடுகளின் ஆயர் மன்ற பேரவையின் சார்பாக, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் மறைவுக்கு உங்களுக்கும், தங்களின் அலுவலகப் பணியாளர்களுக்கும் எங்கள் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நற்செய்திக்கு அவர் அளித்த உறுதியான சாட்சியத்திற்கும், கடைசி நாள்கள் வரை கடவுளின் மக்களை மேய்ப்பதில் அவர் காட்டிய அசைக்க முடியாத ஆழ்ந்த அர்ப்பணிப்புக்கும் நாங்கள் நன்றி கூறுகிறோம். அவரது வாழ்க்கை உண்மையிலேயே பணிவான சேவை, அன்பு மற்றும் ஞானத்திற்கு ஒரு முன்மாதிரியாக இருந்தது என்றால் மிகையாகாது.

திருஅவை ஒன்பது நாள் துக்கக் காலத்தைத் தொடங்குகிறது, மேலும் நமது திருத்தந்தையின் ஆன்மா அமைதியில் துயில் கொள்ள ஒரு சிறப்பு இறைவேண்டல் நிகழ்வு ஒப்புக்கோடுக்கப்படும்.

நித்திய இளைப்பாற்றியை இவருக்கு அளித்தருளும் ஆண்டவரே.

முடிவில்லாத ஒளி இவர்மேல் ஒளிர்வதாக.

இவரது ஆன்மா இறைவனின் இரக்கத்தால் நிலைவாழ்வு பெறுவதாக. ஆமென்.

அன்புடன்,

பேராயர் ஜூலியன் லியாவ்,
தலைவர்,
மலேசியா.சிங்கப்பூர், புருணை ஆயர் மன்ற பேரவை

---



# திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் இரக்கம் மற்றும் நீதியின் மரபை பிரதமர் போற்றுகிறார்

கோலாலம்பூர்: பிரதமர் அன்வார் இப்ராஹிம், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் மறைவுக்கான இரங்கல் செய்தியில், திருத்தந்தை இரக்கம், பணிவு மற்றும் நீதி ஆகியவற்றிற்கு கலங்கரை விளக்கமாக விளங்கினார் என்று தெரிவித்துள்ளார்.

கடந்த ஏப்ரல் 21 அன்று வெளியிட்ட ஓர் அறிக்கையில், உலகளாவிய நிலையில் தெற்கிலிருந்து வந்த முதல் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் தலைமைத்துவம், பிளவுகள் பெருகிவரும் உலகில் அவரது தொலைநோக்குத் தலைமைத்துவத்திற்கு அன்வார் புகழாரம் வட்டினார்.

"உலகின் தெற்கிலிருந்து வந்த முதல் திருத்தந்தை மட்டுமல்லாமல், கொந்தளிப்பான உலகில் இரக்கம், பணிவு மற்றும் நீதியின் குரலாகவும் அவர் உலகில் நினைவுகூரப்படுவார்" என்று அன்வர் கூறினார். சமயங்களுக்கிடையே புரிதல், சுற்றுசூழல் மேலாண்மை மற்றும் ஒடுக்கப்பட்டவர்களின் கண்ணியம் ஆகியவற்றிற்கான அவரது அர்ப்பணிப்பு கத்தோலிக்க திருஅவையின் எதிர்ப்பார்ப்புக்கு உள்ளது."

திருத்தந்தை பிரான்சிஸ் அமைதிக்கான ஆதரவுக்காகவும் சமயங்களுக்கிடையிலான உரையாடலை வளர்ப்பதில் அவரது அயராத முயற்சிகளுக்காகவும், முஸ்லிம் உலகம் உட்பட உலகளாவிய சமூகங்கள் முழுவதன் பாராட்டைப் பெற்றவர். உலகளாவிய நெருக்கடிகள் குறித்த திருத்தந்தையின் கொள்கை ரீதியான நிலைப்பாட்டை, குறிப்பாக காசாவில் மனிதாபிமான நிலைமை குறித்த அவர் வெளிப்படுத்திய அக்கறையை அன்வார் நினைவுகூர்ந்தார்.

"காசாவில் நிலவும் மிகப்பெரிய துயரம் குறித்து அவர் ஆழ்ந்த தெளிவுடன் பேசினார், வன்முறையால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும், அவர்கள் எங்கிருந்தாலும், நாம் அதே இரக்கத்தைக் காட்ட வேண்டும் என்பதை உலகிற்கு நினைவூட்டினார்," என்று பிரதமர் அன்வார் மேலும் கூறினார்.

புலம்பெயர்ந்தோர் மற்றும் அகதிகளின் துயர நிலைக்கு திருத்தந்தையின் அசைக்க முடியாத அர்ப்பணிப்பையும் பிரதமர் பாராட்டினார். உலகத் தலைவர்கள் மனசாட்சியுடனும் மனிதாபிமானத்துடனும் அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்று இவர் வலியுறுத்தினார்.

"அவரது பணி வாழ்க்கையும் அமைதியான வலிமையும், 'அவரது வாழ்க்கை மென்மையானது, மேலும் இயற்கையே எழுந்து நின்று உலகம் முழுவதும் 'இவர் ஒரு மாமனிதர்' என்று சொல்லும் அளவுக்கு அவரில் நற்பண்புகள் கலந்திருந்தன' என்ற பாடகரின் வார்த்தைகளை பிரதமர் மேற்கொள்காட்டினார்.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் திருத்தந்தையாக இருந்த காலத்தில் வத்திக்கானுக்கு மேற்கொண்ட ஆரம்பகால பயணத்தின் தனிப்பட்ட நிகழ்வை அன்வர் நினைவு கூர்ந்ததோடு, மேலும் மலேசிய அரசாங்கத்தின் மற்றும் மக்களின் சார்பாக இரங்கல் தெரிவித்தார்.

நிறைவாக, "திருத்தந்தைக்கும் உலகெங்கிலும் உள்ள கத்தோலிக்கர்களுக்கும், குறிப்பாக மலேசியாவில் உள்ள கத்தோலிக்க சமூகத்திற்கும், நாங்கள் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம். அவரது புகழ் நிலைத்திருக்கட்டும்." என்று முடித்தார்.

# உயிரோட்டமான சிலுவை பாதை நாடகம் - கூலாய் கிறிஸ்து ராஜா தேவாலயம்

நாடகக் காணொளியைப் காண, QR குறியீட்டை ஸ்கேன் செய்யலாம்.





13 ஏப்ரல் 2025 – கூலாய் கிறிஸ்து ராஜா தேவாலயத்தின் தமிழ் மறைக்கல்வி பிரிவு வழங்கிய சிலுவைப் பாதை நாடகம், பங்குத் திருச்சபை மக்களின் மனங்களில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியது. புனித வாரத்தின் சிறப்பு நிகழ்வாக நடைபெற்ற இந்த நாடகம், இயேசுவின் இரக்கமும் தியாகமும் உணர்த்தும் மிக உணர்ச்சி மிகுந்த நிகழ்வாக இருந்தது.

இயேசுவின் கடைசி தருணங்களை மிக நிஜமாகவும் மனதை உருக்கும் முறையிலும் இந்த நாடகம் பிரதிபலித்தது. இயேசு விழும் காட்சிகள், தாயாரை சந்திக்கும் தருணங்கள், சிலுவையில் அறையும் கொடூரங்கள், பலர் கண்களில் கண்ணீரை வரவைத்தது. பார்வையாளர்களோடு கூடவே, நாடகத்தில் பங்கேற்ற கலைஞர்களும் கூட சில தருணங்களில் கதறி அழுதனர். அவர்கள் கூறும்போது, “இது ஒரு நாடகம் மட்டும் அல்ல, நாங்கள் உண்மையில் இயேசுவோடு நடந்தது போல இருந்தது. கடவுளின் முன்னிலையில் நாங்கள் இருந்தோம் என்ற உணர்வு ஏற்பட்டது.”

இயேசுவின் பாத்திரத்தை ஐசக் பெல்வின் சிறப்பாகவும் உணர்வுபூர்வமாகவும் செய்தார். அன்னை மரியாளை பாத்திரத்தை ஷவினா ஆழமான வேதனையோடு நடித்தர். விரோணிக்கா – செரின் என், யோவான் – நோர்பட், யோகேப் – டாஷ்வீன், சீமோன் – கேஷ்வன் ஆகியோர் தங்களது கதாபாத்திரங்களை அர்ப்பணிப்போடு நடித்தனர். படைவீரர்களாக நடித்த பென் மெத்யூ, மோனிஷ் போல் மற்றும் என்.ஜே. ஜோயல் நிக்கோலஸ் – அவர்கள் தனது வேடத்தில் ஊடுருவிச் சிறப்பாக நடித்தனர்.


யூதப் பெண்களாக நடித்த எலிசா என், கனிஷா, எண்ட்ரினா ஷாஸ்னி, மிகேல் மதில்தா, எல்ஷடா ஜெய்றீனா, யஷினா, பிரேஷ்வினா மற்றும் ரேச்சல் ஆகியோர் – இயேசுவின் துயரத்தை உணர்த்தும் முகமாக தங்கள் வேடத்தில் உணர்ச்சி வாய்ந்த நடிப்பை வெளிப்படுத்தினர்.

நாடக இயக்குநராகவும் இயேசுவின் குரலாகவும் சுரேஷ் நாதன் பணியாற்றினார். தமிழ் மறைக்கல்வி ஒருங்கிணைப்பாளர்கள் எலிசபெத் மற்றும் யேசு ஆரோக்கியம் வழிநடத்தினார்கள். முகபாவனை மற்றும் பொருட்கள் தயாரிப்பு குழுவில் ஹெலன், ரீதா, எட்வின் மோசஸ், என்ரினா ஜென், ஜாக்லின் மேரி என்பவர்கள் ஈடுபட்டனர். புகைப்படம் மற்றும் காணொளி ஒளிப்பதிவு – ஜான்சன் மற்றும் மெல்வின் ஜான்சன். ஆதரவுக் குழுவினர் – ஜெரமியா, நாதநல், மார்க் மரியாதாஸ் ஆகியோர் பணி சிறப்பாக செய்தனர்.

இது ஒரு சாதாரண நாடக நிகழ்ச்சி அல்ல; இது ஒரு ஆன்மீகப் பயணமாக இருந்தது. நாடகக் குழுவினர் கூறுவது போல, “இது நாங்கள் செய்தது அல்ல – கடவுள் தாம் இவையனைத்திலும் செயல்பட்டார். நாங்கள் அவருடைய கருவிகள் மட்டுமே. மகிமை அனைத்தும் இறைவனுக்கே!”

## மேலும் இரண்டு பங்குகளில் புனித வெள்ளியன்று சிலுவைப் பாதை நடைபெற்றது. அவை:





புனித ஆரோக்கியமாதா தேவாலயம், பாரிட் புந்தார்





புனித பிரான்சிஸ் அசிசி தேவாலயம், செராஸ்

# திருத்தைலத் திருப்பலி: குருவானவர்களாகவும், திருப்பணியாளர்களாகவும், நற்செய்தி பணியாளர்களாகவும் இருக்க ஓர் அழைப்பு



கடந்த ஏப்ரல் 15-ஆம் தேதியன்று மாசாய், ஜோகூரில் இருக்கும் புனித தெரேசா தேவாலயத்தில் இவ்வாண்டிற்கான திருத்தைலத் திருப்பலி ஆயர் பெர்னர்ட் போல் தலைமையில் சிறப்பாக நடந்தது. அவரது மறையுரையில் அன்றைய நாளின் வாசகங்களில் இருந்து மூன்று மிக முக்கிய சொற்களை அவர் முன்னிறுத்தினார் — குருவானவர்கள், திருப்பணியாளர்கள் மற்றும் நற்செய்தி பணியாளர்கள் — இவை கிறிஸ்துவின் அடையாளத்தின் சாராம்சமாக உள்ளன என்று கூறினார்.

“இவை வெறும் வார்த்தைகள் அல்ல,” என்று கூறிய அவர்; “இவை நம்முடைய கடமைகளும் பொறுப்புகளும் ஆகும். மேலும் கிறிஸ்துவின் சீடர்களாக நாம் மேற்கொள்ள வேண்டிய வழிகளும் இதில் அடங்கும்”, என்றார்.

ஆயர் பெர்னட் மேலும் பேசுகையில், இறைவனுடைய பணியாளராக இருப்பது என்றால், கிறிஸ்துவின் வாழ்க்கையில் பங்கேற்பதையும், கடவுளுடனும், மனிதகுலத்துடனும், படைப்புகளுடனும் ஆழமான இணைப்பில் வேரூன்றியிருப்பதையும் குறிக்கிறது என்று விளக்கினார். இது செபம் மற்றும் தியானத்தின் வழி மட்டுமே உருவாகும். அதன் மூலம் குருவானவர்கள் உண்மையில் கடவுளின் மக்களுடன் சேர்ந்து பயணிக்க முடியும்.

“ஊழியர்” என்ற சொல் இயேசுவின் பணியில் பங்கேற்பதற்கான அழைப்பைப் பிரதிபலிக்கிறது என்று அவர் கூறினார்: உதாரணத்துக்கு நொருங்குண்டவர்களைக் குணப்படுத்துதல், துயருற்றவர்களுக்கு ஆறுதல் கூறுவது, ஒடுக்கப்பட்டவர்களை விடுவிப்பது ஆகும். “குருவானர்கள் என்று சொல்லளவில் இருப்பதை விட செயல் மூலம் இறைமக்களுடன் இணைந்து நல்ல திருச்சபையைக் கட்டியெழுப்ப வேண்டும் எனக் கூறினார்.

நற்செய்தி என்பது, அனைத்து கிறிஸ்தவர்களும் தைரியமாக வாழ வேண்டும் என்பதை நினைவுபடுத்துகிறது. “நாம் இந்த உலகிற்கு நற்செய்தியைக் கொண்டு செல்பவராக இருப்பது என்பது உலகத்தில் இறைவனின் நற்பெயராக இருப்பதைக் குறிக்கும்,” என்று அவர் கூறினார். “புறப்படுங்கள், வருபவரை வரவேற்று உபசரியுங்கள், ஒருங்கிணையுங்கள். அதனுடன் இறைவன் அன்பே என்பது நிச்சயம் என எடுத்துரையுங்கள்” என்று அவர் கூறினார்.

“உங்கள் குருத்துவ நியமனத்தைக் கொண்டாடுவதை ஒருபோதும் நிறுத்தாதீர்கள். நீங்கள் செல்லும் இடமெல்லாம் சிறந்த குருவானவர்களாகவும், நல்ல திருப்பணியாளர்களாகவும், நற்செய்தியாளராகவும் உண்மையுள்ளவர்களாகவும் இருங்கள்.” என்று ஆயர் கூறினார்.

# பாஸ்கா காலத்தின் 3 ஆம் ஞாயிறு – மே 4, 2025

திருத்தூதர் பணிகள்: 5:27b-32, 40b-41

திருவெளிப்பாடு: 5: 11-14 யோவான்: 21: 1-19

கிறிஸ்துவில் அன்பார்ந்த சகோதர சகோதரிகளே, பாஸ்கா காலத்தின் மூன்றாம் ஞாயிறில் பயணித்துக்கொண்டிருக்கும் நமக்கு, இன்றைய வாசகங்கள் திருத்தூதர்களின் துணிவையும், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மாறாத அன்பையும் மன்னிப்பையும் எடுத்துக்காட்டுகின்றன.

இயேசுவின் விண்ணேற்றத்திற்குப் பின் தங்கள் உயிருக்குப் பயந்துகொண்டிருந்த திருத்தூதர்கள், இயேசுவைப் பற்றி அறிவிக்கக்கூடாது என்று அச்சுறுத்திய தலைமைக்குருக்களுக்கு எதிராகத் துணிந்து பேசுவதை நாம் வாசிக்கின்றோம். யாருக்கு கீழ்ப்படியவேண்டும்? மனிதருக்கா? அல்லது கடவுளுக்கா? இன்னும் ஒருபடி மேலே போய் நீங்கள் தான் அவரை சிலுவையில் அறைந்து கொன்றீர்கள் என்று துணிவோடு இயேசுவைப் பற்றி அறிக்கையிடுகின்றார்கள்.

இயேசுவின் இறுதிநாட்களில் உயிருக்குப் பயந்திருந்த திருத்தூதர்கள் உயிர்த்த ஆண்டவரைக் கண்டதோடு மட்டுமல்லாமல் அவர்களைத் திடப்படுத்தும் நய ஆவியாரைப் பெற்றுக்கொண்டவுடன் அவர்களின் வாழ்க்கையும் பேச்சும், நடவடிக்கைகளும் முற்றிலும் மாற்றம் பெற்று தங்களின் உயிரைவிட ஆண்டவரைப் பற்றி எடுத்துரைப்பதே அவர்களின் கடமை என்று முற்றிலும் மாறிவிட்டனர்.

இரண்டாம் வாசகத்தில் திருத்தூதர் யோவான் தான் காணும் காட்சியில் விண்ணுலகு, மண்ணுலகு மற்றும் படைப்புகள் அனைத்தும் அரியணையில் வீற்றிருப்பவருக்கு புகழ்பாடுவதைக் காண்பதாக கூறுகிறார். நாம் தாள்பணிந்து வணங்கக்கூடிய ஒருவர் நம் ஆண்டவராகிய இயேசு மட்டும் தான் என்பதை நமக்குத் தெள்ளத்தெளிவாகக் காட்டுகிறார்.

நற்செய்தி வாசகத்தில் இயேசு உயிர்த்தெழுந்தபின் திருத்தூதர்கள் தங்களின் பழைய மீன்பிடித் தொழிலுக்கே மீண்டும் திரும்பிவிட்டார்கள். முதல் திருத்தூதர்களை இயேசு அழைத்தபோது நான் உங்களை மனிதரைப் பிடிப்போராக்குவேன் என்று கூறிய ஆண்டவரின் வார்த்தைகள் அவர்களுக்கு மறந்துபோனது. அதனால் பேதுரு, “நான் மீன்பிடிக்கப்போகிறேன்” என்று கூறியதும் மற்ற திருத்தூதர்களும் அவரைப் பின்சென்றனர். அவர்கள் அந்த நேரத்தில் இயேசுவைப் பற்றிய குழப்பத்தில் இருந்தார்கள். இயேசு வந்து அவர்களின் வலையை வலப்பக்கத்தில் வீசுமாறு கூறுகிறார். கிடைத்த மீன்பாட்டைக் கண்டதும் தான் அவரின் அன்புச்சீடர் “அவர் ஆண்டவர் தாம்” என்று கூறுகிறார். பழைய வாழ்க்கைக்கு அவர்கள் போய்விட்டதைக் கண்டு இயேசு அவர்கள் மீது வருத்தம் கொள்ளவில்லை. மாறாக அவர்களுக்கு உணவு தயாரித்துப் பறிமாறுகிறார். மேலும் தம்மை தெரியாது என்று மறுதலித்த பேதுருவை திருஅவையின் தலைவராக ஏற்படுத்துகிறார்.

இங்கு குறிப்பிடப்படும் நூற்று ஐம்பத்து மூன்று என்ற எண்ணிக்கை, பாலஸ்தீனப் பகுதியில் 153 வகையான மீன்கள் இருந்ததாக விவிலிய அறிஞர்கள் கூறுகின்றனர். இதனின் மற்றுமொரு பொருள் இந்த உலகின் அனைத்து இனமக்களும் இயேசு ஆண்டவரில் ஒன்று கூட்டிச் சேர்க்கப்படுவர் என்பதையும் மேலும் அத்தனை மீன்கள் இருந்தபோதும் வலை கிழியவில்லை என்பது, இந்த உலக மக்கள் அனைவரையும் இயேசுவின் திருஅவை அரவணைத்துக்கொள்ளும் என்பதன் உருவகமாகவும் இறையியலாளர்கள் பொருள்கொள்கின்றனர்.

நம் வாழ்க்கையிலும் எண்ணற்ற அற்புதங்களையும் மாபெரும் குணமளித்தலையும் நாம் கண்டுணர்ந்தாலும், நம் வாழ்க்கைநிலையில் தொய்வு ஏற்படும்போது, மீண்டும் நாம் பழைய வாழ்க்கைக்கு சென்றுள்ளதை இப்போது நினைவுக்குக் கொண்டுவருவோம். இருந்தபோதும், நம்மை மீண்டும் மீண்டும் தேடிவரும் நம் மீட்பர் இயேசுவை நாம் பற்றிக்கொள்கிறோமா? பாஸ்கா காலம் முழுவதும் நாம் திருத்தூதர்களின் பணிகளைப் பற்றித் தான் சிந்திக்கிறோம். என் வாழ்க்கையில் நான் உயிர்த்த ஆண்டவருக்கு சாட்சியாகத் திகழ நான் பெற்றுக்கொண்ட நய ஆவியாரில் முழு நம்பிக்கையும், அவரின் வழிநடத்துதலையும் ஏற்றுக்கொள்கின்றேனா என்று நாம் தேர்ந்துதெளிவோம். புதிய திருத்தந்தையை தேர்ந்துதெடுக்கப்போகும் இந்தக் காலத்தில் பேதுருவின் வழித்தோன்றலாக, திருஅவையை வழிநடத்தும் ஒரு ஞானமேய்ப்பரைத் தேர்ந்தெடுக்கும் ஞானத்தையும் அறிவுத்தெளிவையும் நம் கர்தினால்கள் அனைவரும் பெற்றுக்கொள்ள இறைவேண்டல் செய்வோம். உயிர்த்த ஆண்டவர் நம் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக!